## திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை:- டாக்டர்.கே.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.6623/2018/அ4 நாள்:16.08.2018

பொருள்:- பொதுப்பணி - திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு - உடுமலைப்பேட்டை வட்டம் - பள்ளபாளையம் கிராமம் - கிராம உதவியாளர் - திருமதி.லோகநாயகி - 30.04.2016 அன்று காலமானது - மகன் திரு.ச.சுதாகரன் - கருணை அடிப்படையிலான பணிநியமனம் கோரியது - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

பார்வை:-
1 திரு.வி.சக்திவேல், த/பெ.வேலுச்சாமி என்பவரின் விண்ணப்பம் நாள்:23.04.2018.
2 திரு.எஸ்.சுதாகரன், த/பெ.வி.சக்திவேல் என்பவரின் விண்ணப்பம் நாள்:23.04.2018.
3 உடுமலைப்பேட்டை, வட்டாட்சியரின் ந.க.எண்.3435/ 2018/அ7 நாள்:11.05.2018 மற்றும் 25.05.2018.

* * * * *

**உத்திரவு :-**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பள்ளபாளையம் கிராமத்தில் கிராம உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது கடந்த 30.04.2016 அன்று காலமான திருமதி.லோகநாயகி என்பவரின் மகன் திரு.ச.சுதாகரன் என்பவருக்கு முதுநிலை வரிசை மற்றும் தகுதியினைப் பரிசீலனை செய்து கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக கீழ்க்காணுமாறு பணிநியமனம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பதவி மற்றும் பணிநியமனம் செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | திரு.ச.சுதாகரன்,<br>த.பெ.வி.சக்திவேல்,<br>9/21, மருள்பட்டி,<br>உரல்பட்டி அஞ்சல்,<br>உடுமலைப்பேட்டை வட்டம்,<br>திருப்பூர் மாவட்டம். | இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>பல்லடம்.<br>(காலியாக உள்ள பணியிடத்தில்) |

2). தனியர் காலந்தாழ்த்தாது உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தப்படுகிறார்.

3). இவரது பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. தனியரது பணிநியமனத்தை வரன்முறைப்படுத்தி அரசாணை பெறப்பட்ட பின்னரே இவரது பணி வரன்முறை செய்யப்பட்டதாக கருதப்படும்.

4). தனியரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் ஏதேனும் மெய்த்தன்மையற்றவை என பின்னர் தெரிய வருமாயின் இவரது பணிநியமனம் உடனடியாக ரத்து செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

G:\A4\2018\Proceedings\Commpasianate Appointment.docx